தலைப்பு 176 – துறைமுகங்கள் கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

தலைப்பு 176 – துறைமுகங்கள் கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் துறைமுகங்கள் கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பறிக்கை 2025 மே 26 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலங்கை விமானப்படைக்கு உரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

துறைமுகங்கள் கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் ஆகியவற்றுக்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விவரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு இலக்கம் 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் துறைமுகங்கள் கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை துறைமுகங்கள் கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின், பொதுத் திறைசேரி மற்றும் பாராளுமன்றத்தின் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் துறைமுகங்கள் கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்லொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல்,தவறாக

காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தியுள்ளேன்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

3.1.1 ஒதுக்கீட்டுப் பயன்பாடு

3.1.1.1 மீண்டெழும் செலவினம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சரியான மதிப்பீடு செய்யாத காரணத்தால், நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட 14 செலவின விடயங்களின் மதிப்பிடப்பட்ட ரூபா 274,100,000 தொகையான	அமைச்சு அலுவலக மற்றும் அமைச்சின் சம்பளம் மற்றும் ஊதியம், மேலதிக வேலை நேரக்கொடுப்பனவுகள் அரசாங்கத்தின் மாற்றம் காரணமாக செலவுகள்	நி.பி. 50 படி வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்படுகையில் அவை நிதியாண்டிற்குள் செயற்படுத்தக்கூடியதான இயலுமையை

	ஒதுக்கீட்டில் இருந்து ரூபா 28,021,473 தொகையான ஒதுக்கீடு ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப் பட்டிருந்தன. இது ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டின் 15% முதல் 100% வரையிலான அளவினதாகும்.	எஞ்சியமையும், மேலதிக வேலை நேரச் செலவினம் கட்டுப்படுத்தப்பட்டமையாலும் செலவின விடய இல. 176-1-1-0-1202-0/11 மேலதிக எரிபொருள் செலவு கட்டுப்படுத்தப்பட்டமையாலும், செலவின விடய இல. 176-1-1-0-1502-0/11சில ஊழியர்கள் அரச சேவைகள் சேமலாப நிதியத்தில் பதிவாகி இராமையாலும் 176-1-2-1102-0/11 செலவின விடயத்தின் கீழ் பாதீட்டு முகாமைத்துவச் சுற்றறிக்கைக்கு அமைய செலவுகள் கட்டுப்படுத்தப் பட்டமையால் 4 செலவின விடயங்களான எரிபொருள், உணவு மற்றும் பானங்கள், சீருடைகள், வாகனங்கள் மற்றும் பிற செலவுகளுக்காக எதிர்பார்க்கப்பட்டவாறு செலவை ஏற்க இயலாமையும் 176-1-2-0-1403-0/11 செலவின விடயத்திற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையால் நீர் மற்றும் மின் பட்டியல்கள் செலுத்தப்படுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிராதமையும் 176-1-2-0-1503-0/11 செலவின விடயத்திற்காக எதிர்பார்க்கப்பட்டவாறு கொடுப்பனவை மேற்கொள்ள இயலாதிருந்தது.	உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியதுடன் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு ஆண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்காக ஆண்டிற்குள் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென.
(ஆ)	நான்கு செலவின விடயங்களுக்கு உரிய வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினால் ரூபா.3,100,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரை குறித்த ஒதுக்கீட்டிலிருந்து எதுவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. .	செலவின விடய இல. 176-1-1-0-1203-0/11 உத்தியோகத்தர்கள் சீருடை கொடுப்பனவுக்கு விண்ணப்பிக்காமை, செலவின விடய இல. 176-1-1-0-1403-0/11 இலங்கை துறைமுக அதிகாரசபையால் நீர் மற்றும் மின் பட்டியல்கள் செலுத்தப்படுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிராதமையும் 176-1-1-0-1404-0/11 இன் கீழ் எதிர்பார்க்கப்பட்டபடி செலவினம் ஏற்க நேராமை மற்றும்	நி.பி. 50 படி வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்படுகையில் அவை நிதியாண்டிற்குள் செயற்படுத்தக்கூடியதான இயலுமையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியதுடன் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு ஆண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்காக ஆண்டிற்குள் பயன்படுத்தப்படுவதற்கான

		செலவின விடய இல. 176-1-1-0-1502-0/11இல் சில ஊழியர்கள் அரச சேவைகள் சேமலாப நிதியத்தில் பதிவாகியிராமையாலும் ஆகும்.	நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென.
(இ)	14 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 181,248,527 ஆன தேறிய ஒதுக்கீட்டில் ரூபா 85,323,281 ஒதுக்கீடு பயன்படுத்தப் பட்டிராமையால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டில் 32% முதல் 88% வரையான வீச்சில் ஒதுக்கீடு எஞ்சியிருந்தது.	சம்பளம் மற்றும் ஊதியம், மேலதிக வேலை நேரக்கொடுப்பனவுகள், வெளிநாட்டு பயணச் செலவுகளுக்காக அரசாங்கத்தின் மாற்றம் காரணமாக செலவுகள் எஞ்சியமையும், பாதீட்டு முகாமைத்துவச் சுற்றறிக்கைக்கு அமைய செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டமையும், எரிபொருள் மற்றும் போக்குவரத்துச் செலவின விடயத்திற்காக மேலதிக எரிபொருள் செலவுகளைக் கட்டுப்படுத்தியமையும், போக்குவரத்துக் கொடுப்பனவுக்குப் பதிலாக ஒதுக்கப்பட்ட வாகனங்களைப் பெற்றுக்கொண்டமையும் அஞ்சல் மற்றும் தகவல் தொடர்பு, இடமாற்றங்கள், எரிபொருள் மற்றும் வாகனங்களுக்கு எதிர்பார்த்தபடி செலவுகளைச் செய்ய வேண்டியிராமையும் 176-1-2-0-1403-0/11 செலவின விடயத்திற்காக இலங்கை துறைமுக அதிகாரசபை நீர் மற்றும் மின் பட்டியல்களைச் செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிராமையும் ஆகும்.	நி.பி. 50 படி வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்படுகையில் அவை நிதியாண்டிற்குள் செயற்படுத்தக்கூடியதான இயலுமையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியதுடன் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு ஆண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்காக ஆண்டிற்குள் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென.

3.1.1.2 மூலதனச் செலவுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அமைச்சால் மீளாய்வாண்டில் 176-1-2-0-2103 செலவின விடயத்திற்காக ரூபா 1,000,000	செலவின விடய இல. 176-1-2-0-2103-0/11, 176-1-2-0-1203-0/11 எதிர்பார்த்த படி	நி.பி. 50 படி வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்படுகையில்

	ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் முறையற்ற மதிப்பீடு காரணமாக, அந்த ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 209,345 ஒதுக்கீடுகள் நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன. இது மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டில் 21 சதவீதமாகும்.	செலவுகள் ஏற்படவில்லை.	அவை நிதியாண்டிற்குள் செயற்படுத்தக்கூடியதான இயலுமையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியதுடன் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு ஆண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்காக ஆண்டிற்குள் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென.
(ஆ)	05 செலவின விடயங்களுக்கு உரித்தாக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் மொத்தம் ரூபா 4,745,000,000 ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியிலும் குறித்த ஒதுக்கீட்டிலிருந்து எதுவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	செலவின விடய இல.176-1-1-0-2002-0/11 இற்காக எதிர்பார்த்தபடி செலவினங்கள் ஏற்பட்டிராமையும் செலவின விடய இல. 176-2-4-21-2104-0/17 மற்றும் 176-2-4-21-2302-0/12 ஆகியவற்றுக்கு காங்கேசன்துறை துறைமுக படகுத்துறை மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு மேம்பாட்டுச் செயற்திட்டம் 2020 அக்டோபர் இல் ஆரம்பிக்கப்பட்டு ஆரம்ப வடிவமைப்பு பணிகள், முன் தகுதி ஆவணம் மற்றும் விரிவான செயற்திட்ட அறிக்கை ஆகியவை பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. முன் தகுதி ஆவணம் மற்றும் கடன் நீடிப்பிற்காக இந்திய EXIM வங்கியின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் செயற்திட்டம் அத் தினத்தில் இருந்து இன்று வரை செயற்படாமல் உள்ளது. இதற்குத் தீர்வாக, கட்டுமானத்தைத் தொடங்க இந்திய அரசு 63.65 மில்லியன் அமெரிக்க டொலர்களை மானியமாக முன்மொழிந்துள்ளது. இருப்பினும், இக் கொடுப்பனவு இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்க	நி.பி. 50 படி வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்படுகையில் அவை நிதியாண்டிற்குள் செயற்படுத்தக்கூடியதான இயலுமையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியதுடன் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு ஆண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்காக ஆண்டிற்குள் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென.

		வில்லை. செலவின விடய இல. 176-2-4-24-2104-0/17 இற்கான இறுதி கட்டணம் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட இருந்தது. இருப்பினும், மாறுபடும் விடய அளவுகள் குறித்த கலந்துரையாடல்கள் காரணமாக இந்த செயல்முறை தாமதமானது. குறித்த கொடுப்பனவை 2025 இல் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, எமது அங்கீகரிக்கப்பட்ட விலை அதிகரிப்பு மதிப்பீட்டோடு ஒப்பிடுகையில் விலை அதிகரிப்புத் தொகையில் குறிப்பிடத்தக்க அளவு குறைவால் எதிர்பார்க்கப்படும் பட்டியல் பெறுமதிகளும் ஓரளவு குறைவடைந்துள்ளன. எனவே, எதிர்வுகூறப்பட்டவாறு ஒதுக்கப்பட்ட பாதீடு முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. செலவின விடய இல. 176-2-4-28-2105-0/17 ஆலோசகருக்கு முற்பணம் செலுத்துதல் மற்றும் பகுதியளவான பணம் செலுத்துவதற்கான அமைச்சரவை அனுமதி 2025 ஜனவரி இலேயே பெறப்பட்டமையால் 2024 இல் ஒப்பந்தத்தை வழங்க முடியாது போனமையால் ஒதுக்கீடுகள் எஞ்சியிருந்தன.	
(இ)	அமைச்சால் மீளாய்வாண்டில் 176-2-4-24-2104 விடயத்தில் தூண்கள் மீதான துறைமுகப் பிரவேச அதிவேக பாதைச் செயற் திட்டத்தின் கீழ் பணிமனை கட்டிட வளாக நிர்மாணிப்புச் செயற்திட்டத்திற்கு குறைநிரப்பு	176-2-4-24-2104 செலவின விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்டத்திற்கான இறுதிக் கொடுப்பனவு 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ளது. இருப்பினும், மாறுபடும் பொருட்களின்	நி.பி. 50 படி வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்படுகையில் அவை நிதியாண்டிற்குள் செயற்படுத்தக்கூடியதான இயலுமையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியதுடன்

மதிப்பீட்டின் மூலம் ரூபா 400,000,000 ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவ் ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 117,360,238 தொகையான மிகை மதிப்பீட்டு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இது குறைநிரப்பு மதிப்பீட்டின் 29 சதவீதமாகும்.	அளவு குறித்த கலந்துரையாடல்கள் காரணமாக இந்த செயல்முறை தாமதமானது. பூர்த்தியானதும், இறுதிக் கொடுப்பனவும் பிடிமானத் தொகையுமாக இரண்டும் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, எமது அங்கீகரிக்கப்பட்ட விலை அதிகரிப்பு மதிப்பீட்டோடு ஒப்பிடுகையில் விலை அதிகரிப்புத் தொகை குறிப்பிடத்தக்க அளவு குறைவடைந்துள்ளது. இதன் விளைவாக விலை அதிகரிப்பின் குறைவு காரணமாக எதிர்பார்க்கப்பட்ட பட்டியல் பெறுமதிகளும் ஓரளவு குறைவடைந்துள்ளன. எனவே, எதிர்வுகூறப்பட்டவாறு ஒதுக்கப்பட்ட பாதீடு முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை.	மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு ஆண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்காக ஆண்டிற்குள் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

	கணக்காய்வு அவதானிப்பு	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தால் வழங்கப்பட்ட விதிகளை உகந்த முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்கும், அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டு எல்லைகள் மீறப்பட்டு பொறுப்புகளும் கடப்பாடுகளும் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கில் விநியோகிக்கப்பட்ட 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் (ஆ) இல் குறிப்பிடப்பட்டவாறு இனங்காணப்பட்ட	கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவை என்றும், எதிர்வரும் ஆண்டில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளுக்கு உட்படுகையில் அரச கணக்குகள் சுற்றறிக்கை இல. 255/2017 மற்றும் 2017.04.27 ஆம் திகதிய சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.	சுற்றறிக்கையின் படி ஒதுக்கீடுகள் உகந்த முறையில் பயன்படுத்தப்பட வேண்டியதுடன் ஒதுக்கீடுகள் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்கு அப்பால் கடப்பாடுகளுக்கும் பொறுப்புகளுக்கும் உட்படலாகாது. மேலும், சுற்றறிக்கையின் படி ஏற்படும் அனைத்து பொறுப்புகளும் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட

	கடப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு குறித்த பொறுப்புகளுக்கு உரிய பொருட்கள் அல்லது சேவைகள் பெறப்பட்டதை அடுத்து அதற்காக செலுத்த வேண்டிய தொகை மற்றும் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பாக சான்றளிக்கப்பட்ட வேலையின் பெறுமதி பொறுப்புகளாக பதிவு செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், 2024 ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கான உறுதிச் சீட்டுகள் கணக்காய்விற்கு உட்படுத்தப்படுகையில், 2024 ஆம் ஆண்டிற்கான பொறுப்புகளுக்கு உரிய ரூபா 1,286,857 இம் மாதங்களில் தீர்க்கப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுத் தொகுதியில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளின் கூற்றில் பொறுப்பாக ரூபா 657,214 பெறுமதியான பொறுப்புகள் மாத்திரமே காண்பிக்கப்பட்டிருந்தன. அதன்படி, நிதிக்கூற்றில் ரூபா 629,643 ஆன பொறுப்புகள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.		வேண்டும்.
(ஆ)	2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இல. 255/2017 மற்றும் நி.பி. 94 (1) ஆம் பிரிவின் படி, பொறுப்புகள் மற்றும் செலவினங்களின் அளவு நிதியாண்டிற்கான ஒதுக்கீட்டுத் தொகையின் அளவை ஒருபோதும் மீறலாகாது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 117-01-28-1408 செலவின விடயத்திற்கு	கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவை என்றும், குறித்த தவறு மீள ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.	வருடாந்த ஒதுக்கீட்டில் பணம் இருந்தாலேயன்றி, செலவுகளுக்கு எந்தக் கடப்பாட்டை ஏற்படுத்தலாகாது. மேலும் பொறுப்புகள் மற்றும் செலவினங்களின் அளவு நிதியாண்டிற்கான நிதி ஒதுக்கீட்டை விட அதிகரித்தலாகாது என.

உரிய ரூபா 104,935 ஒதுக்கீட்டை விஞ்சிய பொறுப்புகளுக்கு உட்பட்டிருந்தது.

3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமை	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்			
(i)	நிதிப் பிரமாணம் 185 (2)	பணம் பெறப்பட்ட ஒழுங்கு வரிசையில் காசேட்டிற்கான பதிவுகள் தொடர் வரிசையாக இலக்கமிடப்பட்டு, ஒவ்வொரு பதிவையும் உறுதிப்படுத்தும் ஆவணங்களில் அதே இலக்கத்தைப் பதிதல் வேண்டும் எனினும், ரூபா 13,595,380 பெறுமதிக்கான பற்றுச்சீட்டுக்களின் இலக்கம் காசேட்டில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு ஐயவினா சரியானதுடன் குறித்த தவறு சீராக்கப்பட்டு பற்றுச்சீட்டு இலக்கத்தைப் பதிவுசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துக்கொள்கிறேன்.	பணம் பெறப்பட்ட ஒழுங்கு வரிசையில் காசேட்டிற்கான பதிவுகள் தொடர்வரிசையாக இலக்கமிடப்பட்டு, ஒவ்வொரு பதிவையும் உறுதிப்படுத்தும் ஆவணங்களில் அதே இலக்கத்தைப் பதிதல் வேண்டும்.
(ii)	நிதிப் பிரமாணம் 392(இ)(III)	காசேட்டில் இரத்துச் செய்யப்பட்ட காசோலைக்கான அசல் பதிவின் எதிரே சிவப்பு மையால் பொருத்தமான குறிப்பு எழுதப்பட்டிருக்க வேண்டும். எனினும் ரூபா 14,850 மதிப்புள்ள காசோலை ஒன்று பணம் செலுத்துவதற்காக காசேட்டில் பதிவுசெய்ய்பட்டதை அடுத்து இரத்து செய்யப்பட்ட போதிலும் இது தொடர்பாககாசேட்டில் எந்தவித பதிவும் செய்யப்படவில்லை.	கணக்காய்வு ஐயவினா சரியானதுடன் இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பான விபரம் காசேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது.	காசேட்டில் இரத்துச் செய்யப்பட்ட காசோலைக்கான அசல் பதிவின் எதிரே சிவப்பு மையால் பொருத்தமான குறிப்பு எழுதப்பட்டிருக்க வேண்டும் என.
(iii)	நிதிப் பிரமாணம் 392(இ)(IV)	இரத்து செய்யப்பட்ட காசோலைக்குப் பதிலாக வழங்கப்பட்ட புதிய காசோலையின் விபரங்கள்,	கணக்காய்வு அவதானிப்புகள் சரியானதுடன் 2024.10.25 அன்று இரத்துச்	இரத்து செய்யப்பட்ட காசோலைக்குப் பதிலாக வழங்கப்பட்ட புதிய காசோலை,

		அசல் காசோலைக்குக் குறுக்குப் பதிவுடனான புதிய குறிப்புடன், புதிய காசோலை வழங்கப்பட்ட திகதியின் கீழ் பயன்பாட்டில் உள்ள காசேட்டில் சிவப்பு மையால் பதியப்பட வேண்டும். அத்துடன் காசு தொடர்பான நிரல் வெற்று நிலையில் இருத்தல் வேண்டும். இருப்பினும், 2024 அக்டோபர் 25 ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்ட 765673 ஆம் இலக்க ரூபா 497,612 பெறுமதியான காசோலை இரத்து செய்யப்பட்டதாக மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்ததுடன் வழங்கப்பட்ட புதிய காசோலை (765674) குறித்து காசேட்டில் எவ்வித பதிவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	செய்யப்பட்ட 765673 ஆம் இலக்க காசோலைக்காக வழங்கப்பட்ட 765674 ஆம் இலக்க காசோலை தொடர்பான விவரங்கள் காசேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன.	அசல் காசோலைக்கு குறுக்குப் பதிவுக் குறிப்பும், புதிய காசோலையை வழங்கப்பட்ட திகதியின் கீழ் பயன்பாட்டில் உள்ள காசேட்டில் சிவப்பு மையால் பதியப்பட வேண்டும். அத்துடன் காசு தொடர்பான நிரல் வெற்று நிலையில் இருத்தல் வேண்டும் என.
(iv)	நிதிப் பிரமாணம் 427 (2) (இ)	திணைக்களக் கணக்குப் புத்தகங்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் ஒப்பிடுதலின் கீழ் ஒவ்வொரு மாதத்திற்குமான மொத்த செலவினங்கள், அந்தத் திணைக்களத்தால் குறித்த மாதத்திற்கான திறைசேரிப் புத்தகங் களில் காட்டப்பட்டுள்ள எண்ணிக்கைகளுடன் தொடர்ந்து ஒப்பிடப்பட வேண்டும். எனினும், பொது வைப்பு கணக்கில் மாதாந்தம் கொண்டு செல்லப்பட்ட மீதியைக் காண்பித்து மாதந்தோறும் சமநிலைப்படுத்தப்படவில்லை.	கணக்காய்வின் அவதானிப்பு சரியானது. பொது வைப்புக் கணக்கு எதிர்காலத்தில் மாதந்தோறும் சமநிலைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கிறேன்.	திணைக்களக் கணக்குப் புத்தகங்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் ஒப்பிடுதலின் கீழ் ஒவ்வொரு மாதத்திற்குமான மொத்த செலவினங்கள், அந்தத் திணைக்களத்தால் குறித்த மாதத்திற்கான திறைசேரிப் புத்தகங்களில் காட்டப்பட்டுள்ள எண்ணிக்கைகளுடன் தொடர்ந்து ஒப்பிடப்பட வேண்டும்.
(ஆ)	பொது நிர்வாகச் சுற்றறிக்கை			
(i)	தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இல. 07/2022 மற்றும் திறைசேரிப் பணிப்பாளர் நாயகத்தின் 2024.02.07	தேசிய பாதீட்டுத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தால், 2016 ஆம் ஆண்டில், குழாம் கடமைகளுக்காக ஓர் டபிள் கப் வாகனம் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படுத்துவதற்கு	அமைச்சில் உள்ள வாகனங்கள் பழையவை என்பதால், பழுதுபார்க்கும் பணிகளைக் குறைத்தல், எரிபொருள் செயற்திறனை அதிகரித்தல் மற்றும் அப்போதைய இராஜாங்க	அனுமதி வழங்கப்பட்டதன் படி, குழாம் கடமைகளுக்காக குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனம்

	திகதிய BD/TRP/176/012 /2024 கடிதத்தின் 2 ஆம் பந்தி	ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கால அவகாசம் 31.10.2021 அன்று முடிவடைந்திருந்தது. இதை நீடிப்பாகக் கருதி, BD/TRP/176/01/2024 மற்றும் 2024.02.07 திகதிய கடிதத்தில் (2) இன் மூலமும் குத்தகை முறையின் அடிப்படையில் ஒரு மோட்டார் வாகனப் பெறுகைக்கான போதிலும் வருடாந்தம் ரூபா 2,548,800 இற்கு குத்தகை அடிப்படையில் ஓர் வாகனம் பெறப்பட்டு அந்த வாகனம் ஒரு அதிகாரிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.	அமைச்சுக்கள் மற்றும் அமைச்சுக்கள் வலுவிழந்ததை அடுத்து அமைச்சு அதிகாரிகளால் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. வாகனங்கள் டொயோட்டா லேண்ட் க்ரூஸர் வீ8 ஜீப்புகள், பீஎம்டபிள்யூ கார்கள் மற்றும் மிட்சுபிஷி டபிள் கப் வண்டிகளாகும். மேற்குறித்த விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டு, மிகவும் சாதகமான, பொருளாதார ரீதியாக இலாபகரமான செலவினமாக குத்தகை முறையின் அடிப்படையில் பெறப்பட்ட வாகனத்தை தொடர்ந்து வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	அந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.
(ii)	பொது நிர்வாகச் சுற்றறிக்கை (30/2016) இன்	துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமானசேவைகள் அமைச்சிடம் 45 வாகனங்கள் இருந்ததுடன் அவற்றில் 15 வாகனங்களில் எரிபொருள் சோதனைகள் நடத்தப்பட்டிருக்கவில்லை.	சுற்றறிக்கையின்படி, இந்த அமைச்சின் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துப் பிரிவில் குழாம் கடமைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட 10 வாகனங்களின் எரிபொருள் செயற்திறன் பரீட்சிக்கப்பட்டு, குறித்த ஓர் அறிக்கை 2024.07.23 அன்று அரச கணக்காய்வுப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் சோதனைக்கு உட்படுத்த முடியாது எஞ்சியுள்ள கணிசமான எண்ணிக்கையிலான வாகனங்கள், முன்னாள் அமைச்சர்களுக்கும் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கும் ஒதுக்கப்பட்ட வாகனங்களில் சில வாகனங்கள் பழுதுபார்ப்பு	எரிபொருள் பரிசோதனை குறித்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நடவடிக்கைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டமையால் தற்காலிகமாக வழங்கப்பட்ட வாகனங்களின் எரிபொருள் செயற்திறன் குறித்த வகையில் சோதனைக்கு உட்படுத்தப்பட முடியாதிருந்தது. எரிபொருள் சோதனையை மேற்கொள்ள முடியாது போன அனைத்து வாகனங்களும் போக்குவரத்துப் பிரிவிற்கு தற்காலிகமாக வழங்கப்பட்ட கார்களும், அப்புறப்படுத்தப்பட்ட/அப்புறப்படுத்துவதற்காகத் தீர்மானிக்கப்பட்ட 09 கார்களுக்கும், ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள 02 வாகனங்கள் தவிர்ந்த மீதமுள்ள வாகனங்களுக்கு மீண்டும் எரிபொருள் பரிசோதனையை நடத்தி, 45 நாட்களுக்குள் இது தொடர்பான ஓர் அறிக்கை கணக்காய்வுப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுசெய்து தெரிவித்துக் கொள்கிறேன்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 தொலைநோக்கும் செயற்பணியும்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2011 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட சூரியவெவ கிரிக்கெட் மைதானத்தின் நிர்மாணத்திற்காக ஒரு ஒப்பந்ததாரருக்கு செலுத்த வேண்டிய கடனைத் தீர்ப்பதற்காக, 2017	ஹம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணிப்பு ஒப்பந்தத்திற்கு மேலதிக பணியாக சூரியவெவ கிரிக்கெட் மைதானத்தின் நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக, ஒப்பந்ததாரருக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்	அமைச்சின் செலவுகள் அதன் நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகளுடன் இணங்க வேண்டும்.

திசெம்பர் 14 ஆம் திகதி இலங்கை துறைமுக அதிகாரசபையால் மக்கள் வங்கியிடமிருந்து பெறப்பட்ட ரூபா 3,950,858,870 கடன்தொகைக்கு வருடாந்தம் 33.30 சதவீத வட்டி விகிதத்தில் (வட்டி விகிதம் மாறுபடும்), 15 ஆண்டுகளுக்குள் செலுத்தத்தக்க ரூபா 11,796,877,071 கடன் பெறப்பட்டிருந்தது. குறித்த கடனைச் செலுத்துவதற்காக கூட்டு அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் அமைச்சரவைத் தீர்மானங்களின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் இதன் படி 2018 ஆம் ஆண்டு முதல் கடன் வட்டியைச் செலுத்துவதற்கும், 2021 ஆம் ஆண்டு முதல் கடன் வட்டியுயையும் தவணைகளையும் செலுத்துவதற்கும் தேவையான ஒதுக்கீடு வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் மூலம் இந்த அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தன. அமைச்சிற்குச் சொந்தமற்ற இந்த மைதானத்திற்கு மீளாய்வாண்டில், கடன் தவணைகள் மற்றும் வட்டியாக ரூ.682,993,732 அமைச்சின் வங்கி வட்டி மற்றும் நிதிச் செலவுகளாக செலவின விடயம் 176–2–4–23-1509 மற்றும் 176-2-4-26-2509 (இலங்கை துறைமுக அதிகாரசபை, சூரியவேவா, சர்வதேச கிரிக்கெட் மைதானம் - அரசு நிறுவனங்கள்) ஆகியவற்றின் கீழ் இந்தக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இச் செலவினம், அமைச்சின் மீண்டெழும் செலவினத்தில் 54.54 சதவீதத்தையும், தொகையைச் செலுத்தாமையால் ஒப்பந்ததாரர் கடன் தீர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார், எனவே, அதை இரத்து செய்து ஒப்பந்ததாரருக்கு பணம் செலுத்துவதற்காக, மக்கள் வங்கியிடமிருந்து ரூபா 3,950,858,869.57 கடனை அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க இலங்கை துறைமுக அதிகாரசபை, மக்கள் வங்கித் தாபனக் கிளையிலிருந்து பெற்றிருந்தது. இந்தக் கடனும் வட்டியும் 15 ஆண்டுகளுக்குள் (மூன்று ஆண்டுகள் சலுகைக் காலத்துடன்) மீளச் செலுத்தும் உடன்பாட்டுடன் நிதி அமைச்சினால் பெறப்பட்டுள்ளது. இந்த சூரியவெவ செயற்திட்டம் இந்த அமைச்சின் நோக்கத்திற்குப் பொருந்தாத போதிலும், கூட்டு அமைச்சரவைப் பத்திரத்தின் படி, அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, சூரியவெவ கிரிக்கெட் மைதானக் கடன் தொகையை கடன் சேவைக் கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக இந்த அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறே, இதற்காக தேவையான ஒதுக்கீடு நிதி அமைச்சால் இந்த அமைச்சிற்குக் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் விடயப் பரப்பிற்கு உரித்தற்றதான போதிலும், அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, ஒப்படைக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றாது அதற்கு சவாலிட அமைச்சிற்கு அதிகாரம் இல்லை என்பதை மேலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூலதனச் செலவினத்தில் 28.69 சதவீதத்தையும், மொத்த செலவினத்தில் 38.03 சதவீதத்தையும் கொண்டிருந்தது. இந்த கிரிக்கெட் மைதானம் நிர்மாணிக்கப்பட்ட காணி 2011 ஏப்ரல் 26 ஆம் திகதி அரசாங்க காணிகள் கட்டளைச் சட்டத்தின் 23(2) பிரிவின் படி இலங்கை கிரிக்கெட்டிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சகத்திற்கு அதன் மீது எந்த உரிமையும் இல்லை. அதன்படி, அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த செலவு அமைச்சின் நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகளுக்கு இணங்காதிருந்தன.

4.2 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தூண்களில் நிர்மாணிக்கப்படும் துறைமுக அணுகல் அதிவேக நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 53,000,000 கட்டுமாண மற்றும் நிர்மாணிப்புகளுக்காக ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மொத்த ஒதுக்கீடும் எஞ்சியிருந்ததுடன் குறித்த பணிகள் நிறைவேறியிருக்கவில்லை.	குறித்த செயற்திட்டத்திற்கான இறுதிக் கொடுப்பனவு 2024 ஆம் ஆண்டில் வழங்கப்பட இருந்தது. எவ்வாறெனினும், இருப்பினும், மாறுபடும் பொருட்களின் அளவு குறித்த கலந்துரையாடல்கள் காரணமாக இந்த செயல்முறை தாமதமானது. பூர்த்தியானதும், இறுதிக் கொடுப்பனவும் பிடிமானத் தொகையுமாக இரண்டும் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, எமது அங்கீகரிக்கப்பட்ட விலை அதிகரிப்பு மதிப்பீட்டோடு ஒப்பிடுகையில் விலை அதிகரிப்புத் தொகை குறிப்பிடத்தக்க அளவு குறைவடைந்துள்ளது. இதன்	பட்டியல்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதற்கான கால நிர்ணயிப்பின் போது விடயங்களின் மாறுபாடு கருத்திற்கொள்ளப்பட்டு செலவினங்கள் எதிர்வுகூறப்படுகையில் விலைத் தளம்பல் குறித்து கருத்திற்கொள்ளப்பட வேண்டும் என.

		விளைவாக விலை அதிகரிப்பின் குறைவு காரணமாக எதிர்பார்க்கப்பட்ட பட்டியல் பெறுமதிகளும் ஓரளவு குறைவடைந்துள்ளன. எனவே, எதிர்வுகூறப்பட்டவாறு ஒதுக்கப்பட்ட பாதீடு முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை.	
(ஆ)	மேற்கு கொள்கலன் இறங்குதுறை (ii) இற்கான மேற்கு அலை நீளத்தை நீடிப்பதற்கான விரிவான செயற்திட்டத்தில் காணி மற்றும் காணி மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 560,000,000 தொகையும் ரூபா 100,000,000 தொகையுமான முழுமையான ஒதுக்கீடும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த பணி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	இச் செயற்திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) TA 3425 SRI இன் போக்குவரத்து செயற்திட்ட தயாரிப்பு வசதி ((Transport Project Preparatory Facility - TPPF) இன் கீழ் ஒரு ஆலோசகரை நியமிப்பதற்காக 2024 ஆண்டில் பெறுகைச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. இதன் படி, 2024 ஆம் ஆண்டிற்கான அச் செயற்திட்டத்திற்கான முற்பணத் தொகையும் ஏனைய அடிப்படைக் கொடுப்பனவிற்காக குறித்த தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், பெறுகைச் செயற்பாடு நிறைவேற்றப்படுவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் பெறுவதற்கும் எடுக்கப்பட்ட காலம் காரணமாக, இச் செயற்திட்டம் 2024 ஆம் ஆண்டின் ஆரம்பிக்கப்பட இயலாதிருந்தது. இதன் படி, 2024 ஆம் ஆண்டின் போது குறித்த செயற்திட்டத்திற்காக எந்தவித கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	திட்டங்களைத் தயாரிப்பதற்கு முன், அச் செயற்திட்டத்தை செயற்படுத்தத் தேவையான அனுமதிகள் மற்றும் இணக்கப்பாடுகளை முன்கூட்டியே கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் தொடர்புடைய திட்டத்தை ஆண்டின் போது செயற்படுத்த முடியுமா என்பது குறித்து கருத்திற்கொள்ள வேண்டியதுடன் அதற்கேற்ப ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட வேண்டும்.
(இ)	காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைப்பதற்காக இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கிக்கும் (EXIM) இடையே 45.27 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெறுவதற்காக 2018 ஜனவரி	காங்கேசன்துறை துறைமுக செயற்திட்டத்தின் மறுசீரமைப்பு 2020 அக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆரம்ப வடிவமைப்புப் பணிகள், முன் தகுதி ஆவணம் மற்றும் விரிவான செயற்திட்ட அறிக்கை தயாரிப்பு பூர்த்திசெய்யப்பட்டு, ஆலோசகர்களுக்கு ரூபா 196.3	திட்டங்களைத் தயாரிப்பதற்கு முன், அச் செயற்திட்டத்தை செயற்படுத்தத் தேவையான அனுமதிகள் மற்றும் இணக்கப்பாடுகளை முன்கூட்டியே கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் தொடர்புடைய

10, அன்று ஒரு டொலர் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 04 ஆண்டுகளுக்கும் மேலாகியிருந்த போதிலும் துறைமுகத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி, இந்தச் செயற்திட்டத்தின் நிர்மாணிப்புப் பணிகள் 2021 செப்டம்பர் இல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் இச் செயற்திட்டத்தின் புதுப்பித்தல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2024 ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் காங்கேசன்துறை துறைமுக புதுப்பித்தல் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 4,591 மில்லியன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறித்த ஒதுக்கீடு, முக்கிய செலவினத்திற்காக ரூபா 765 மில்லியன் தொகையும் ரூபா 3,826 மில்லியன் தொகையுமாக ஆகும். எவ்வாறெனினும், வருடாந்த நிதிக்கூற்றுக்களின் படி, மேற்கூறிய ஏற்பாடுகள் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளில் இருந்து எந்த செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. இதனை அடுத்து செயற்திட்டம் இதுவரை இந்திய EXIM வங்கியிடமிருந்து முன் தகுதி ஆவணம் மற்றும் கடன் நீடிப்பிற்கான அங்கீகாரத்திற்காக காத்திருக்கிறது. இதற்கான தீர்வை நாடுவதற்காக, நிர்மாணப் பணிகளைத் ஆரம்பிப்பதற்காக இந்திய அரசு 63.65 மில்லியன் அமெரிக்க டொலர் மானியத்தை முன்மொழிந்துள்ளது. இருப்பினும், இந்த மானியம் இதுவரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. எனவே, எதிர்வுகூறப்பட்ட ஒதுக்கீடு நேர அட்டவணையின் படி பாதீட்டு ஒதுக்கீடு பயன்படுத்தப்படவில்லை. ஆகையால், செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்காக நிதி ஆதாரம் (கடன், மானியம் அல்லது முதலீட்டு திட்டம்) நிறைவேற்றப்பட வேண்டும்.

திட்டத்தை ஆண்டின் போது செயற்படுத்த முடியுமா என்பது குறித்து கருத்திற்கொள்ள வேண்டியதுடன் அதற்கேற்ப ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட வேண்டும்.

4.3 உள்நாட்டு நிதி ஈடுபடுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஹிங்குரக்கொடை சர்வதேச விமான நிலைய அபிவிருத்தித் திட்டத்தின் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்புகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,000,000,000 ஒதுக்கீட்டில், 75 சதவீத ஒதுக்கீடு மீதமாகியிருந்ததுடன் குறித்த பணிகள் பூர்த்தியடைந்திருக்கவில்லை.	இச் செயற்திட்டத்திற்காக ரூபா 2,000,000,000 தொகை 2024.04.03 அன்று இலங்கை விமானப்படைக்கு ஹிங்குரக்கொடை விமான நிலைய அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டது. இதனை அடுத்து, இச் செயற்திட்டத்திற்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுவதற்காக துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சால் 2024.06.13 அன்று அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் 2024.07.02 அன்று கிடைக்கப்பெற்றிருந்தது. அங்கீகாரம் பெறப்பட்டதை அடுத்து இலங்கை விமானப்படைக்கும் செயற்திட்ட ஆலோசனை நிறுவனத்திற்கும் இடையிலான ஒப்பந்த உடன்படிக்கை 2024.08.13 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. மறுநாள்முதல், இலங்கை விமானப்படையால் இந்த செயற்திட்டத்தின் நிர்மாணிப்புப் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு வந்த போதிலும், 2024.12.31 இல் உள்ளவாறு இந் நிர்மாணப் பணிகளின் பௌதீக முன்னேற்றத்தில் 34 சதவீதம் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.	திட்டம் தயாரிக்கப்பட்டவாறு குறித்த காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என.

4.4 பெறுகைகள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
வாகன பழுதுபார்ப்புக்காக விலைமனுக் கோரப்படுகையில் வழங்குனர்களால் சமர்ப்பித்த பெறுமதி சேர் வரியுடனான மதிப்பீடு, ரூபா 2,307,578 ஆனதுடன் பணம் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 2,201,247 விலைப்பட்டியலில் பெறுமதி சேர் வரி சேர்க்கப்படாது கழிவு	இல. KX – 2992 கொண்ட காரின் தானியங்கி கியர் அமைப்பின் பழுதுபார்ப்பிற்காக ரூபா 2,307,579 மொத்த விலை மதிப்பீட்டை முகவரக நிறுவனம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதன்படி, பழுதுபார்ப்பின் பின்னர் ரூபா 97,394 ஆன கழிவு	சுற்றறிக்கையின் படி, பெறுமதி சேர் வரி செலுத்தப்பட வேண்டிய ஒரு நிறுவனத்திடமிருந்து சேவையைப் பெற்றதை அடுத்து, அந் நிறுவனத்தால் அறவிடப்படும் பெறுமதி

வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் இல. CGIR/2021/(1)-02 மற்றும் 2021.01.09 ஆம் திகதிய சுற்றறிக்கையின் மூலம் அரசாங்கத்திற்கு பெறுமதி சேர் வரி செலுத்தப்படாது அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற வேண்டிய வரி வருமானம் தனிநபர்களால் தக்க வைத்துக்கொள்ளப்பட்டுள்ளதால், அரச நிறுவனங்களால் வழங்குனருக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் தொடர்பான விபரம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள வடிவமைப்பின் படி அந்தத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், மேற்கண்ட விலைப்பட்டியலுடன் தொடர்புடைய ரூபா 335,860 ஆன பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவு தொடர்பான விபரம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.	வழங்கப்பட்டதை அடுத்து மொத்த விலைப்பட்டியல் (பெறுமதி சேர் வரியுடன்) ரூபா 2,201,747 ஆகும். அதன்படி, அந்த பெறுமதியிலிருந்து முற்பணத் தொகை கழிக்கப்பட்டு ரூபா 2,201,747 - ரூபா 1,153,764 = ரூபா 1,047,985 தொகை மாத்திரமே செலுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டதன் படி, அதிகளவான கட்டணம் எதுவும் செலுத்தப்படவில்லை.	சேர் வரிக்குரிய விபரம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டும் என.

4.5 முகாமைத்துவ பலவீனங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) 11 உறுதிச்சீட்டுக்களுக்கு உரிய மொத்தம் ரூபா 154,600 பணத்தைப் பெற்ற நபர்களால், ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் பணம் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியைக் குறிப்பிடாது தங்கள் கையொப்பங்களை மாத்திரமே பயன்படுத்தப்பட்டு பணம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி, பணத்தைப் பெற்ற அதிகாரி குறித்த தொகையை சரியாக பெற்றுக்கொண்டமையை உறுதிப்படுத்த இயலாதிருந்தது.	கணக்காய்வு ஐயவினா சரியானது என்றும், அதே தவறு மீண்டும் நிகழாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.	பணத்தைப் பெற்றுக்கொண்ட நபர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் பணம் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதி குறிப்பிடப்பட வேண்டும் என.

(ஆ)	2024 அக்டோபர் 25 முதல் 2024 டிசம்பர் 19 வரை பொது வைப்பு கணக்கிலிருந்து ரூபா 31,050 மதிப்புள்ள பணத்தை மீள்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவற்றுடன் தொடர்பாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு ஐயவினா சரியானது என்றும், அதே தவறு மீண்டும் நிகழாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.	பொது வைப்பு கணக்கிலிருந்து பணத்தை மீளக் கொடுப்பனவு செய்கையில் அவற்றிற்கு உரித்தாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட திகதி குறிப்பிடப்பட வேண்டும்.
(இ)	பணி இடைநீக்கம் செய்யப்பட்ட ஒரு அதிகாரியிடமிருந்து அமைச்சிற்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 293,470 கடன் மீதித் தொகை 20 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியிலும் குறித்த மீதி அறவிடப்படுவதற்கு அமைச்சிற்கு இயலாது போயிருந்தது. இந்த தீர்க்கப்படாத கடன் மீதிகள் தொடர்ந்து கடன் பதிவேடுகளில் முன்கொண்டு வரப்பட்டிருந்தன.	பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரியான திரு. ஜே.ஏ. அரியசேன அவர்கள் குடியிருக்கும் இரத்மலானை பிரதேச செயலாளரிடம் தகவல் கோரப்பட்ட போது, அவர் வெளிநாடு சென்றுவிட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, செயலாளர், 2024.11.08 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அவர் எந்த நாட்டிற்கு சென்றுள்ளார் என்பது குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரிடம் விசாரித்துள்ளதுடன் இதற்கான பதில் கிடைக்கப்பெற்றிரரததுடன் 2025.01.07 திகதி முதலாவது நினைவூட்டல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அவரது மனைவிக்கு ஓய்வூதிய உரிமை உள்ளதென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது, அதன்படி, 2023.07.08 ஆம் திகதி ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு ஓர் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டு திரு. அரியசேனவின் மனைவியின் ஓய்வூதியத்திலிருந்து அறவிடுவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.	நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என.

5. நல்லாளுகை

5.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தின் 2019 ஜனவரி 12 திகதிய 01-2019 ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டுதல்கள் சுற்றறிக்கையின் 5.3 ஆம் பந்தியின் அறிவுறுத்தல்களின் படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் காலாண்டிற்கு ஒரு முறையாவது நடத்தப்பட வேண்டிய போதிலும், 2024 ஆம் ஆண்டில் 3 கூட்டங்கள் மாத்திரமே நடத்தப்பட்டிருந்தன.	நான்காவது காலாண்ற்கு உரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2024 நவம்பர் 14 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெற்றமை யால் அதன் விளைவாக குறித்த காலப்பகுதியின் போது அமைச்சு, அமைச்சுச் செயலாளர்கள் மற்றும் அமைச்சின் விடயப் பரப்பு மாற்றம் ஏற்பட்டது. மேலும், அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களில் மாற்றம் ஏற்பட்டிருந்ததுடன் குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டமையால், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்திற்குத் தேவையான தகவல்களைப் பெறுவதில் உள்ள சிரமங்கள் காரணமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடத்தப்பட முடியவில்லை.	சுற்றறிக்கையின்படி, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் ஆகக் குறைந்த பட்சம் காலாண்டிற்கு ஒரு முறையாவது நடத்தப்பட வேண்டும் என.

6. மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிட நிலையிலான பதவியணி தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிறுவனத்தில் நிரந்தர ஊழியர்களின் மொத்த வெற்றிட எண்ணிக்கை 17 ஆகும். இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் கோரிக்கை கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன, குறித்த வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை.	அமைச்சின் செயல்பாடுகள் மற்றும் பணிகளைச் செய்வதற்கு போதுமான பணியாளர்கள் பராமரிக்கப்பட வேண்டும் என.

பதவியணி வகை	அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை	உள்ளபடியான எண்ணிக்கை	வெற்றிட நிலையிலான எண்ணிக்கை
சிரேஷ்ட நிலை	22	20	02
மூன்றாம் நிலை	03	01	02
இரண்டாம் நிலை	61	49	12
ஆரம்ப நிலை	27	26	01
மொத்தம்	113	96	17

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் நிலையான பதவியணியின் மொத்த வெற்றிட ஊழியர் எண்ணிக்கை 17 ஆகக் காணப்பட்டது. அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அறிக்கைத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.